# காணி நிலம் வேண்டும்



# பாரதியார்

- பெயர் : பாரதியார்
- இயற்பெயர் : சுப்பிரமணியன்
- பெற்றோர் : சின்னசாமி, இலக்குமி
- ஊர் : எட்டயபுரம் (திருநெல்வேலி)
- காலம் : 11.12.1882 – 11.9.1921
- சிறப்பு : மகாக்கவி, தேசியக்கவி
- நூல்கள் : கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திச்சூடி,

# காணிநிலம் வேண்டும்



# காணிநிலம் வேண்டும்

காணி நிலம் வேண்டும் – பராசக்தி
காணி நிலம் வேண்டும், - அங்கு
தூணில் அழகியதாய் – நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் – அந்தக்
காணி நிலத்தினிடையே – ஓர்மாளிகை
கட்டித் தரவேண்டும் – அங்கு
கேணியருகினிலே – தென்னைமரம்
கீற்று மிளநீரும்.

# காணிநிலம் வேண்டும்

பத்துப் பன்னிரண்டு – தென்னைமரம்
பக்கத்திலே வேணும் – நல்ல
முத்துச் சுடர்போலே – நிலாவொளி
முன்பு வரவேணும், அங்கு
கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதிற் படவேணும், - என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே – நன்றாயிளந்
தென்றல் வரவேணும்.

# காணிநிலம் வேண்டும்

பாட்டுக் கலந்திடவே – அங்கேயொரு
பத்தினிப் பெண்வேணும் – எங்கள்
கூட்டுக் களியினிலே – கவிதைகள்
கொண்டுதர வேணும் – அந்தக்
காட்டு வெளியினிலே - அம்மா!
நின்றன் காவலுற வேணும், - என்றன்
பாட்டுத் திறத்தாலே–இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்.

# பாடலின் பொருள்

- காணி அளவு நிலம் வேண்டும்.
- அங்கு ஒரு மாளிகை கட்டித்தர வேண்டும்.
- அழகான தூண்களையும் தூய நிறமுடைய மாடங்களையும் அது கொண்டிருக்க வேண்டும்.
- நல்ல நீரையுடைய கிணறும் அங்கே இருக்க வேண்டும்.
- இளநீரும் கீற்றும் தரும் தென்னைமரங்கள் வேண்டும்.
- அங்கே முத்து போன்ற நிலவொளி வீச வேண்டும்.
- காதுக்கு இனிய குயிலின் குரலோசை கேட்க வேண்டும்.
- உள்ளம் மகிழுமாறு இளந்தென்றல் தவழ்ந்து வர வேண்டும்.